# ஐங்குறுநூறு குறிஞ்சி வாழ் உயிரினங்கள்

*முனைவர் கே. இரா. கமலாமுருகன்*
இணைப் பேராசிரியர், உயர் தமிழாய்வு மையம்
இராணி மேரி கல்லூரி (தன்னாட்சி)
https://doi.org/10.5281/zenodo.14383273

*உலகில் பண்பாட்டில் சிறந்ததான பூமியாக பாரத பூமித் திகழ்கின்றது. இத்தகைய பண்பாண்டின் சிறப்பு என்ன? என்ற கேள்வி எழுமாயின் பல்லாயிரம் ஆண்டுகள் அல்ல அல்ல பல இலட்சம் ஆண்டுகள் முன்னதாகவேத் தோன்றிய பழம்குடியாகவும் பண்பாட்டின் பிறப்பிடமாகவும் தமிழகம் திகழ்கின்றது என்பதுவே அதன் சிறப்பு. எனவே,*

***பாருக்குள்ளே நல்ல நாடு***
***எங்கள் பாரத நாடு***

*என்று பாரதி போற்றுகின்றார்.*

*அத்தகைய சிறப்புகளை ஆவணங்களாக பதிவு செய்துள்ள முறைகளில் தக்கச் சான்றாக சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன.*

*சங்க இலக்கியங்களில் ஐந்திணை என்றும் திணை சார்ந்த வாழ்வியல் சூழலினையும் வாழ்ந்தமையினை எடுத்துரைக்கின்றார். அவ்வகையில் சங்க இலக்கியங்களில் ஒன்றான ஐங்குறுநூறு சூழலினுள் அமைந்துள்ள குறிஞ்சி நிலம் சார்ந்த உயிர்களைப் பற்றிய செய்திகளை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.*

## குறிஞ்சியின் சிறப்பு

*பதினெண் மேற்கணக்கில் எட்டுத் தொகையினுள் அகம் பேசும் இலக்கியங்களில் ஒன்றாக ஐஞ்குறுநூறு அமைந்துள்ளது.*

*அகம் என்பதனைத் தொல்காப்பியர் ஏழுதிணையாக அமைத்து பின்னர் அவற்றுள்ளும் கைக்கிளை பெருந்திணை என்பதான இருநிலையினைத் தவிர்த்து வரும் ஏனைய ஐந்தும் அன்பின் ஐந்திணை என்று அமைத்துள்ளார். அந்த ஐந்தின் அன்பு என்பதற்கு ஆதாரமாகத் திகழ்பவை நிலமும் பொழுதும் என்பதனை,*

**முதல் எனப் படுவது நிலம் பொழுது இரண்டின்**
*இயல்பென மொழிப இயல் புணர்ந்தோரே*

*என்று தொல்காப்பியர் எடுத்துரைத்திடுவதில் பாவினுக்கும் அடிப்படை நிலம் என்பதனைச் சுட்டுகின்றார். அந்த நிலமானது*

***மாயோன் மேய காடுறை உலகமும்***
***சேயோன் மேய மைவரை உலகமும்***
***வேந்தன் மேய தீம்புனல் உலகமும்***
***வருணன் மேய பெருவால் உலகமும்***
***முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச்***
***சொல்லிய முறையில் சொல்லவும் படுமே***

*என்று நிலத்தைப் பகுத்துரைக்கின்றது.*

*காரணம் நிலப்பிரிவினை ஒட்டியும் பொழுதுகளின் வரவுகளை ஒட்டியும் தான் நிலத்தின் இயல்பும், நிலத்தில் வாழும் உயிர்களின் வாழ்வியலும் இயல்பும் பெரும்பான்மை அமைந்துள்ளன என்பதனை இதன் மூலம் தொடக்கத்திலேயே எடுத்துணர்த்த முற்படுகின்றார்.*

*இதில் குறிஞ்சி என்பது மலையும் மலை சார்ந்த இடமும் என வரையறுக்கப்படுகின்றது. ''கல்தோன்றி மண்தோன்றாக் காலம்'' என்று தமிழின் பழமைக்குக் கூறும் சான்றின் வழியும் அறிவியல் வழியும் பாறைகளே பெரும்பான்மை நிலத்தில் அமைந்திருந்தின. இயற்கையை ஒட்டி வாழத் துவங்கிய மக்களும் அந்தப் பாறைகளையும் மலைகளையும் அங்குள்ள குகைகளையும் தமது வாழ்விடங்களாக அமைத்துக கொள்ளத் துவங்கினர்.*

*எனவே தான் மலைகள் நிறைந்த நிலப்பகுப்பான குறிஞ்சியினைக் கோடு, கல், குவடு, அறை, அரும்கம், சிலம்பு, வெற்பு, மலை, வரை, பொருப்பு, பிறங்கல், குன்றம்,*

*கவாஅன், துறுகளல் என்ற பல பெயர்களில் சுட்டி மகிழ்ந்துள்ளனர் என்பதனையும் நாம் சங்க இலக்கியங்களில் காண முடிகின்றனது. அக ஒழுக்கம் கூடலும் கூடல் நிமித்தமும் என வரையறுக்கப்பட்டது.*

## நிலமே மன உணர்வினைத் தீர்மானிக்கும்

*பண்டையத் தமிழர்கள் பண்பில் சிறந்த வாழ்வினையும் வாழத் தலைப்பட்டனர். எனவேதான் நிலம் அடிப்படையாக உணரப்பட்டது. காரணம்*

***நிலத்து இயல்பால் நீர்திரித்தற்றாகும் மாந்தர்க்கு***
***இனத்து இயல்பாகும் அறிவு (குற.452)***

*என்று எடுத்துரைக்கின்றார்.*

*இதன் விளக்கமாக குறுந்தொகை அன்பின் கலப்பின் சிறப்பினை*

***செம்புலப் பெயல்நீர் போல***
***அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே (குறுந்-48)***

*என்று காட்சிப்படுத்துகின்றது.*

## ஐங்குறுநூற்றில் குறிஞ்நில உயிர்கள்

*ஐங்குறுநூறின் குறிஞ்சிப் பாடல்கள் கபிலரின் கவிநயத்தில் படைக்கப்பட்டுள்ளன. ஐங்குறுநூற்றுப் பாடல்கள் ஐவகை நிலத்தின் திணைக்கான வகைப்பாட்டால் அமைந்துள்ளன. எனவே அந்தந்த நிலங்களுக்குரிய முதல், கரு, உரிப்பொருள்களின் பயன்களும் வாழ்வியலும், அழைப்பியலும் அப்பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ள, பருவகால மாற்றங்களும் இதில் சுட்டப்படுகின்றன.*

***வரை ஆம் இழிய கோடல் நீட***
***காதலர் பிரிந்தோர் கையற நலியும்***
***தண் பூளி வடந்தை அற்சிரம்***
***முத்து வந்தனர் - நம் காத லோரே (ஐங் - 223)***

*மேற்சொன்ன நிலம்பொழுது ஒட்டிய உயிர்களின் வகைப்பாட்டில் குறிஞ்சியில் மனிதர்கள் தவிர்த்த உயிர்களில் யானை, மான், குரங்கு, புலி, பன்றி, மயில், கிளி போன்றன எளிமையாக வாழும் சூழல் அமைந்துள்ளமையினைக் காண முடிகின்றன. அவற்றை ஒட்டிய சில உயிர்களின் காட்சிப்பதிவினைக் காண்போம்.*

***களிறு கோட் பிழைத்த கதம்***
***சிறந்த எழு புலி (ஐங்- 218)***

*என்ற பாடலடிகள் புலியின் கோபத்தினைச் சுட்டுகின்றது. மேலும் அதன் இயல்பை இன்பத்தின் இருப்பிடமாகும் என்பதனால் துன்பம் நேரினும் இன்பம் பெற முயலும் வாழ்வின் இயல்பான அடிப்படையில் ஒரு பன்றியின் குடும்பத்தில்*

***புலிகொல் பெண்பால் பூ வரிக் முருளை***
***வளை வெண் மருப்பின் கேழல் புரக்கும்***
***(ஐங்-265)***

*என்ற பாடலடிகளில் பெண் பன்றி புலியின் கால் சொல்லப்பட்ட பின்பும் ஆண் பன்றி தன்னுடைய குட்டிகளைப் பாதுகாக்கும் செய்தியினைப் பகிர்கின்றது.*

*கேழல், குரங்கு இரண்டினுக்கும் குறிஞ்சிக் கபிலர் கேழல் பத்து, குரங்குப் பத்து என்றே பாடல்கள் அமைத்துள்ளார்.*

*குறிஞ்சி நிலத்தில் வாழும் கேழல் குறிஞ்சி வாழ் மக்களுக்கு உதவியாகவும் சில நேரம் எதிரியாகவும் வாழ்ந்துள்ளனர். அது செய்யும் உதவியினை,*

*தினைப் புனங்களில் மழை வந்த சூழலில் அத்திணைப் புனத்துள் நுழைந்து காந்தள் கிழங்கு முதலியவற்றை அகழ்ந்து உண்ணும்போது இதனால் கழனி முழுவதும் உழுதது போன்று புழுதியாகும் உழவர்களாகிய குன்றக் குறவர்கள் அப்படியே தினையை விதைத்து விதைத்திட முயல்வார் என்பதனை*

***கிழங்கமழ் கேழ லுழுத சிலம்பில்***
***தலைவிளை கானவர் கொய்தனர் பெயரும்***
***(ஐங்-270)***

*என்று காட்சிப்படுத்துகின்றது ஐங்குறுநூறு.*

*மந்தியானது தன் காதல் கணவனாகிய கடுவனுடன் மகிழ்ச்சியாக மலையில் தாவியாடுவதனை*

***கல்லா மந்தி கடுவவனோடு உகளும் குன்று***
***(ஐங்-277)***

*என்று காட்டுகின்றார். குரங்குக் குட்டி விளையாடும் காட்சியினை*

***சிலம்பின் வெதிரத்துக் கண்விடு கழைக்கோல்***
***குரங்கின் வன்பறழ் பாய்ந்தென விலஞ்சி -***
***மீனெறி தூண்டிலி னுவக்கும் (ஐங்-278)***

*என்று எடுத்துக் காட்டுகின்றார்.*

மயில்களை அழகின் நயத்தினால் பெண்களுடன் ஒப்பிட்டுப் பல பாடல்களை அமைத்துள்ளார் கபிலர் பெண் போலத் தோன்றுகிறது என்றும் பாடுகின்றார்.

**வீரிந்த வேங்கைப் பெருஞ்சினைத் தோகை**
**பூங்கொய் மகளிரின் தோன்றும் நாட**

**(ஐங் - 297)**

என்றும்,

**புனவர் கொள்ளியிற் புகல்வரும் மஞ்ஞை**
**இருவி யிருந்த குருவி வருந்துறப்**
**புந்தாடு மகளிரிற் படர்தரும்**
**குன்றகொழு நாடனொடு (ஐங்-295)**

என்ற பாடல்களும் சான்றாகின்றன.

கிளிகளை செங்கோல் அரசனைவிட உயர்ந்த நிலையில் கபிலர் போற்றுகின்றார். கொடிச்சி கிளிகளை மகிழ்ந்து நோக்கதலோடு சினந்து விரட்டவும் செய்கிறாள். கிளிகள் அறநெறியை விரும்பி செய்யும் செயலே அரசனைவிட உயர்வானது என்பதனை

**அறம்புரி செங்கோல் மன்னனின் தாம் நனி**
**சிறந்தன போலும் கிள்ளை பிறங்கிய**
**பூக்கமழ் கூந்தல் கொடிச்சி**
**நோக்கவும் படு மவர் ஒப்பவும் படுமே**

**(ஐங் - 290)**

என்ற பாடல் காட்சிப்படுத்துகின்றது.

## நிறைவுரை

உயிர்கள் வாழு வகையில் அமைந்த கோளாக பூமி என்ற நிலம் அமைந்துள்ளது. இதில் ஓரறிவு முதல் ஆறறிவு வரை உள்ள அனைத்து உயிர்களும் வாழும் வகையினை இயற்கை தருகின்றது. சங்கப் பாடல்களில் அதிகமான பாடல்களைத் தந்த கபிலரின் ஐங்குறு நூற்றுப் பாடல்களில் 100 குறிஞ்சிப் பாடல்களிலும் மஞ்ரைப்பத்து, கேழல் பத்து, குரங்குப் பத்து, கிள்ளைப் பத்து என்று அமைத்த சிறப்புகள் கபிலர் குறிஞ்சி நில உயிர்களுக்கும் ஒத்த உரிமையுடையவராய் எடுத்தியம்பியதைக் காண முடிகின்றது.

நிலங்கள் வெறும் இடங்கள் அல்ல; தாவரங்களைக் கடந்து அவையே மனங்களின் எண்ணங்களின் உயிர்களின் விதை நிலங்களாக அமைகின்றன.

**உணர்வோம் ! உணர்த்துவோம்! காப்போம்!**

## உதவிய நூல்கள்

1. ஐங்குறுநூறு மூலமும் விளக்கம் - சாம்ப சிவனான், வளவன் வெளியீடு - மதுரை.